


கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை மற்றும் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன் ஆகியோர் சந்தித்து, தங்களது தந்தை, பெரியார் பெருந்தொண்டர் காரைக்குடி இராம சுப்பையா அவர்களின் 118வது பிறந்தநாள் விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்கள். உடன் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், பொருளாளர் செல்வின் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஸ்ரீதர் வாண்டையார் அவர்கள் சந்தித்து பேசினார்.



இராணிப்பேட்டை சிப்காட் பிரீமியர் லெதர் நிறுவன வளாகத்தில் மாவட்ட சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்கங்களின் சார்பில் மூன்று நாட்கள் நடைபெறும் தொழில் மற்றும் வர்த்தக கண்காட்சியை கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர், இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி ஆகியோர் தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜே.யு.சந்திரகலா மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அய்மன் ஜமால், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜே.எல். ஈஸ்வரப்பன் மற்றும் நிறுவன நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் தலைமையில்

# தமிழ்நாடு தலைகுனியாது "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பயிற்சிக் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் அவர்களின் திட்டமிடலின்படி, வருகின்ற சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை கழகம் மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் தமிழ்நாட்டை வளைத்திட முயற்சிக்கும் வஞ்சக சூழ்ச்சி கொண்ட ஒன்றிய பா.ஜ.க. அரசின் முன்பு "தமிழ்நாடு தலைகுனியாது" என்ற பரப்புரையை கழகம் தொடங்கவுள்ளது. அதன் ஒருபகுதியாக ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் கழகத்தின் வெற்றியை உறுதி செய்யும் வகையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற முன்னெடுப்புக்காக **"கழக மாவட்டச் செயலாளர்கள், மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்களுக்கான பயிற்சிக் கூட்டம்"** வரும் 28.10.2025 - செவ்வாய்க்கிழமை, காலை 9.00 மணி அளவில் மாமல்லபுரம், ஈ.சி.ஆர்.சாலையில் உள்ள "கான்ஃப்ளுயன்ஸ் ஹாலில்" ( Confluence Hall ) நடைபெறும்.

இக்கூட்டத்தில் **மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர்கள், கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகரச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பகுதிச் செயலாளர்கள், பேரூர்ச் செயலாளர்கள்** அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 18.10.2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.





காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி அவளூர் ஊராட்சியில் நலன் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. பார்வையிட்டு நல திட்டங்களை வழங்கினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் த.ரா.செந்தில், ஒன்றிய செயலாளர் க.குமணன், ஒன்றியக் குழு பெருந்தலைவர் திருமதி. மலர்கொடி குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி சாந்தி, ஊராட்சி மன்ற தலைவர் திருமதி சித்ரா பாபு உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## மாமன்னர்கள் மருது சகோதரர்கள் குருபூஜை விழா!

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

*மதுரை, அக்.26-*

*மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விடுதலைப் போராட்ட வீரர்கள் மாமன்னர்கள் மருது பாண்டிய சகோதரர்களின் குருபூஜையை முன்னிட்டு மதுரை தெப்பக்குளத்தில் அன்னாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளதாக மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்,*



*அதன் விபரம்*

*ஆங்கிலேயரை எதிர்த்து இந்திய நாட்டின் விடுதலைக்காக போராட்டம் கண்டு தூக்கு கயிற்றை முத்தமிட்டு உயிர்த்தியாகம் செய்த மாமன்னர்கள் விடுதலைப் போராட்ட வீரர்கள் மருது பாண்டியர் சகோதரர்களின் 224வது குருபூஜையை முன்னிட்டு நாளை (27.10.2025 - திங்கள் கிழமை) காலை 9 மணி அளவில் மதுரை தெப்பக்குளத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளது*

*இந்நிகழ்வில் மதுரை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.*